பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 24 சனிக்கிழமை 07.01.2023 கதிர் 63

### இனி இது ரகசியம் அல்ல!

யாழ் மாநகர சபை மேயர் தேர்வை ஒட்டி எழுந்த சர்ச்சைக்கு ஒரு முடிவு வந்திருக்கிறது.

'தென்னையில் தேள் கொட்ட, பனையில் நெறி கட்டிய மாதிரி' இந்த விடயத்தில் பொறுப்புள்ள சில அதிகாரிகளை அவர்கள் இஷ்டப்படி தவறாக நடக்க ☞2

# யாழ் மேயர் தெரிவு வரும் 19ஆம் திகதி

## வர்த்தமானியும் வெளியானது சர்ச்சைக்கும் முற்றுப்புள்ளி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜனவரி 07

**யாழ் மாநகர சபைக்கு புதிய முதல்வரைத் தேர்வு செய்வதற்கான விசேட கூட்டம் 19ஆம் திகதி ஆம் திகதி நடைபெறும். இது தொடர்பான வர்த்தமானிக்கு அறிவித்தல் நேற்று வழங்கப்பட்டுள்ளது.**

**நேற்று 6 ஆம் திகதியிடப்பட்ட 2313/61 இலக்க வர்த்தமானி அறிவித்தல் இன்று வெளியாகவுள்ளது.** ☞2




## இலங்கை அகதிகள் 38 பேர் கர்நாடகாவில் உண்ணாவிரதம்

கர்நாடகாவில் இலங்கை அகதிகள் 38 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கனடா செல்வதற்காக முகவர்களால் இந்தியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அவர்களாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டு, கைது செய்யப்பட்ட இலங்கை அகதிகள் 38 பேர் நேற்றுத் தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(விரிவான செய்தி 12 ஆம் பக்கத்தில்)




## எம்.பிக்கள் விக்கி,சுமா,இராதா சென்னை மேடையில் ஒன்றாக!

சென்னையில் நேற்றும் இன்றும் நடைபெறும் உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் விசேட உரையாற்றுகிறார். ☞2

## அரியாலையில் கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 07

யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் கைக்குண்டு ஒன்று நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

அரியாலை குசவம்பலம் வீதியில் கைக்குண்டு ஒன்று காணப்படுவதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், பொலிஸார் நீதிமன்ற உத்தரவை பெற்று, பொலிஸ் விசேட அதிரடி படையினரின் குண்டு செயல் இழக்க செய்யும் படையணியின் உதவியுடன் செம்மணி பகுதியில் கைக்குண்டை செயலிழக்க செய்துள்ளனர்.

## தமிழரசின் மத்திய குழு இன்று மட்டக்களப்பில் கூடுகின்றது

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இன்று மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு மத்திய குழு உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியாக உள்ளூராட்சிசபைத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி இன்றைய மத்திய குழுக் கூட்டத்தில் முடிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று யாழில்



மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 23வது நினைவேந்தல் நிகழ்வும் நினைவுப் பேருரையையும் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் ☞2

## சென்னையில் சுமந்திரன் மாநாட்டில் நேற்று உரை



நேற்று சென்னைக்கு சென்றிருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அங்கு விசேட மாநாட்டு இயக்க நிகழ்வு ஒன்றில் பங்கு பற்றி உரை நிகழ்த்தினார்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம், இலங்கைத் தமிழ் மக்களுக்கான அரசியல் ☞2

## யானையுடன் கூட்டமைத்தாலும் மொட்டு தன் தனித்துவத்தை விட்டுக் கொடாதாம்

### கூட்டணியின் சின்னம் மாறாது; நாமம் மாறுமாம்



உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடுவது தொடர்பில் இதுவரை உத்தியோகபூர்வமான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

பொதுஜன பெரமுனவில் இருந்து விலகிச் சென்றவர்கள் மீண்டும் கட்சியுடன் இணைந்து கொள்ள ☞2

## வருவார் ஜெய்சங்கர்!

இரு தரப்பு பேச்சுகளிற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் இந்த மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் இது தொடர்பான இறுதி ஏற்பாடுகள் இன்னமும் பூர்த்தியாகவில்லை.

ஜூலையில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் முதல்தடவையாக ஜெய்சங்கர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

புதுவருடத்தில் இந்தியாவின் உயர்மட்ட பிரதிநிதியொருவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயமாக இது அமையவுள்ளது.

ஜனவரியில் அவர் கொழும்பு வராவிட்டால் பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கையின் 75 ஆவது ☞11

## வடக்கு கிழக்கில் ஐக்கியத்தைக் கோரி நேற்று 2 ஆவது நாளாக கவனவீர்ப்பு




வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் 'ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்துவதற்கு' அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணியில் திரண்டு செயல்படக் கோரி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் ☞11

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதித்திருந்தால், அதன் விளைவு வடக்கு ஆளுநரைத்தான் சிக்கலில் மாட்டியிருக்கும். ஆனால் அவர் சரியான தலைமைத்துவ வழிகாட்டலை வழங்கி, நெருக்கடியை வெற்றிகரமாகத் தவிர்த்திருக்கின்றார் என்று தெரிகின்றது.

கடந்த வருட இறுதியில், இந்த ஆண்டுக்கான தமது – வரவு செலவுத் திட்டம் சபையில் தோற்கடிக்கப்பட்ட நிலையில் –

தமக்கிருந்த அடுத்த கட்ட – கடைசி – சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அதனை நிறைவேற்றச் செய்யும் முயற்சியை முன்னெடுக்காத மேயர் மணிவண்ணன், டிசம்பர் 30ஆம் திகதி மாலை, தமது ராஜினாமாக் கடிதத்தை மாநகர சபையின் ஆணையாளருக்கு அனுப்பி வைத்தார். அத்தோடு ஒரு சர்ச்சையையும் தோற்றுவித்தார்.

தமது ராஜினாமாவோடு யாழ் மாநகர சபையும் கலைந்து விட்டது, இனி புதிய உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர்தான் புதிய சபை தேர்வாகும் என்று அவர் கதை விட்டார். அப்படி இல்லாமல், இருக்கின்ற சபையை வைத்துக்கொண்டு, சபைக்கு எஞ்சிய பதவிக்காலம் இருப்பதாக கருதி, புதிய மேயர் ஒருவரைத் தெரிவு செய்ய முயற்சி எடுத்தால், அதற்குத் தடை பெறத் தான் நீதிமன்றத்திற்கு போவார் எனப் பகிரங்க அறிவிப்பும் செய்தார் அவர்.

டிசம்பர் 30ஆம் திகதி மாலை தமது ராஜினாமா கடிதத்தை ஒப்படைத்த அவர், டிசம்பர் 31 இரவு 10 மணியுடன் தாம் தமது பதவியை விட்டு விலகுகிறார் என்று அதில் குறிப்பிட்டார்.

டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைய முன்னர், தான் தலைமை வகிக்கும் உள்ளூராட்சி சபைக்கு அடுத்த வருடத்திற்கு உரிய வரவு – செலவு திட்டத்தை நிறைவேற்றாத உள்ளூராட்சி சபை தலைவரை வீட்டுக்கு அனுப்பிவிட்டு புதியவரை தேர்ந்தெடுப்பது தான் சட்டவிதி.

ஆக, மணிவண்ணன் தமது பதவியை தாமாக ராஜினாமா செய்ய விட்டாலும் டிசம்பர் 31 உடன் அவரது பதவி தானாகவே பறிபோய் இருக்கும்.

தாம் பதவி விலகி விட்டமையால் சபையும் செயலிழந்து கலைந்து விட்டது என்பதற்கு உள்ளூராட்சி திருத்த சட்டங்களில் உள்ள சில ஏற்பாடுகளை, தனித்துவாசித்து விட்டு, அதன் அடிப்படையில் அறிவித்திருப்பார் போலும் மணிவண்ணன். டிசம்பர் 31 இலேயே அவரின் இந்த அறிவிப்பு விவகாரம் வெளியே வந்துவிட்டது.

அவராலும் அவரது ஆதரவாளர்களாலும் இப்படி தேவையற்ற சர்ச்சை கிளப்பப்பட்ட பின்னணியிலேயே, நிலைமையைத் தெளிவுபடுத்தும் விதத்தில் டிசம்பர் 31ஆம் திகதி நமது மாலைப் பதிப்பில் தெளிவான தலைப்புச் செய்தி ஒன்றை திட்டவட்டமாக வெளியிட்டோம்.

'புதிய யாழ் மேயர் தெரிவு இரு வாரங்களில் நடக்கும்; விரைவில் வர்த்தமானி அறிவித்தல்; தேவையற்ற குழப்பங்கள் முடிவுக்கு' – என்ற தலைப்பில் அந்தச் செய்தி மிக உறுதியான வட்டாரங்களை மேற்கோள்காட்டி பிரசுரமாகி இருந்தது.

அதற்குப் பின்னரும் மணிவண்ணனும் அவரது கூஜா காவிகளும் அடங்கிப் போகவில்லை. தேவையற்ற குழப்பங்களை நீடிக்கவே செய்தனர்.

இதில் பொறுப்புள்ள அதிகாரி ஒருவரும் கூட, தானும் குழம்பி, உள்ளூராட்சி நிர்வாகக் கட்டமைப்பையும் குழப்பும் எத்தனைத்தையும் தொடர்ந்தார் என்றும் அறிந்தோம்.

இந்த விவகாரம் நேரடியாக ஆளுநருக்கு உட்பட்டதல்ல. மாகாண சபை இல்லாத இடத்தில் கூட அவர் நேரடியாக கையாளும் விவகாரம் அல்ல.

ஆனாலும், இவ்விவகாரத்தில் தேசிய ரீதியில் பின்பற்றப்படும் – அல்லது சட்டத்துக்கு வியாக்கியானம் கொடுத்து நடவடிக்கை எடுக்கப்படும் – முறைமைக்கு மாறாக, வடக்கில் விசித்திரமான முடிவு எடுக்கப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்படுமானால், அதன் பாதிப்பு சுற்றி வளைத்துத் தமது தலையில் தான் வந்து விழும் என்பது ஆளுநருக்கு தெரிந்த விடயமே.

விடயத்துக்கு பொறுப்பான உள்ளூராட்சி ஆணையாளரை நியமித்தவரும் தாமே என்ற கோதாவிலும் ஏற்படக்கூடிய தவறு தமது தலையிலும் – தலைமைத் துவத்திலும் – சிக்கலை ஏற்படுத்தும் என்பதைப் புரிந்து கொண்டு, இவ்விவகாரத்தில் உரியதை – சரியானதை – செய்ய வழிப்படுத்தலும், தலைமையும் வழங்கி இருக்கின்றார் வடக்கு ஆளுநர்.

இனி என்ன? புதிய மேயர் தெரிவு நடக்கும். அதற்கு எதிராக நீதிமன்றம் போவேன் என்ற முன்னாள் மேயர் மணிவண்ணன், நாளை மறுதினம் திங்கட்கிழமை இந்த விடயத்துக்காக நீதிமன்றுக்குப் போக வேண்டும்.

அவரது கருத்தை நாம் இப்போது நினைவூட்டியமைக்காகவாவது அவர் நீதிமன்றத்திற்கு போக வேண்டும். போவாரா? பார்ப்போம்.

***

தேர்தல் ஆணையத்தை நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்தார். அதை ஒட்டி வெளியான செய்திகள் பலத்த சர்ச்சை ஏற்படுத்தி உள்ளன.

'ஒரே நிலைப்பாட்டில் ஒன்றாக வாருங்கள்!' என்று பிளவு பட்டிருக்கும் தேர்தல் ஆணைக்குழுவிடம் ஜனாதிபதி கூறினார் என வெளியான செய்திகள் முற்றிலும் தவறானவை என்று தேர்தல் ஆணைய வட்டாரங்கள் மேற்கோள்காட்டி செய்திகள் கிடைத்துள்ளன.

ஒரு தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல் ஆணையாளர்கள் ஜனாதிபதியைத் தேடிப் போய் சந்தித்தமை தேர்தல் நெறிமுறைக்கு மாறானது என்ற பிரதான எதிர்க் கட்சிகளின் குற்றச்சாட்டை தேர்தல் ஆணையமும் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் –

இனிமேல் அப்படி சந்திப்பதற்கு இடம் அளிக்கப்பட மாட்டாது என்றும் –

தேர்தல் ஆணைய வட்டாரத்தில் முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

இன்று காலை – இந்த நிலை – இந்த நிலைமை – வரை உள்ளூராட்சித் தேர்தலை இடைநிறுத்தும் மார்க்கம் எதனையும் அரசுத் தரப்பால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் –

அரசுத் தலைமையின் கையையும் மீறி, தேர்தல் நடைபெறுவது பெரும்பாலும் உறுதியாகி வருகின்றது என்றும் –

விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. அப்படியானால் தேர்தல் சமா இனி ஊர்கள் தோறும் களை கட்டும்.

- மின்னல் -

## யாழ் மேயர் தெரிவு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் மாநகர சபையின் 2023ஆம் ஆண்டிற்கான வரவு –,செலவு திட்டம் ஒரு தடவை தோல்வி கண்டு, இரண்டாவது முறையாகவும் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட முடியாத சூழல் ஏற்பட்ட போது, முதல்வர் வி.மணிவண்ணன் பதவியைத் தாமாக இராஜினாமாச் செய்தார்.

இதையடுத்து, குழப்பமாக சூழல் ஏற்பட்டது.

உள்ளூராட்சி விதிகளின் அடிப்படையில் மீண்டும் முதல்வர் தெரிவு இடம் பெறுமா, இடம்பெறாதா என குழப்பகரமான நிலை காணப்பட்டது.

யாழ் மாநகரசபையின் எதிர்காலம் குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படும் என உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்திருந்தார்.

எனினும் மீண்டும் முதல்வர் தெரிவு நடத்தப்படலாமென்று பலர் கருத்து தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில், மீண்டும் முதல்வர் தெரிவு நடைபெறவுள்ளதாக வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் 06ஆம் திகதிய வர்த்தமாம் மூலம் அறிவித்துள்ளார்.

அந்த வர்த்தமானி அறிவித்தலும் இன்று காலை வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## எம்.பிக்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டின் நேற்றைய நிகழ்ச்சிகளின் போது விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இலங்கையில் இருந்து சென்ற நாடாளுமன்ற உறுப் பினர்களான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், வி.இராதாகிருஷ்ணன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் மேடையில் திருமாவளவனுக்கு விருதை ஒன்று சேர்ந்து வழங்கினர்.

## சென்னையில் சுமந்திரன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வாக 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் அடிப்படையில், மாகாண சபைகள் வாயிலாக, முழுமையான அதிகாரப் பரவலாக்கத்தை நடைமுறைப்படுத்துமாறு தமிழகத் தலைவர்கள் மூலமாக தமிழ் மாநில மற்றும் மத்திய அரசை கோருவது தொடர்பான விசேட மாநாட்டிலே அவர் கலந்து கொண்டார்.

அதன் பின்னர் மாநாட்டின் ஏற்பாட்டாளர் விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவனோடு சென்னைப் பத்திரிகையாளர் மன்றத்தில் பத்திரிகையாளர்களை அவர் சந்தித்து உரையாடினார்.

## மாமனிதர் குமார் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமார் பொன்னம்பலத்தின் திருவுருவ படத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், குமார் பொன்னம்பலத்தின் புதல்வருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மலர் மாலை அணிவித்து ஈகை சுடரும் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களும், பொது மக்களும் குமார் பொன்னம்பலத்தின் திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூபி அஞ்சலி செலுத்தினர்.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத்துறை முன்னாள் தலைவர் கலாநிதி க.சிதம்பரநாதன் நிகழ்வில் கலந்து கொண்டு நினைவுப் பேருரையை ஆற்றினார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், மத குருமார்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யானையுடன் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பு விடுத்துள்ளோம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:–

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட வேண்டிய தேவை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிற்கு கிடையாது. வெற்றியோ, தோல்வியோ தேர்தலை எதிர்கொள்வோம். தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும் என்பது கட்சியின் அடிப்படை கொள்கையாக உள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் களுத்துறையில் ஆரம்பிக்கப்பட்டது. பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசார கூட்டம் களுத்துறை நகரில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அடுத்தக்கட்ட தேர்தல் நடவடிக்கைகளை அநுராதபுர நகரில் இருந்து ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையில் தாமரை மொட்டுச் சின்னத்தை முன்னிலைப்படுத்தி அரசியல் கூட்டணியை அமைக்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரும்பாலான தேர்தல் தொகுதிகளில்

(11ஆம் பக்கம் பார்க்க)






# மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்க முயல்வோருக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும்!

## எச்சரிக்கிறார் அமைச்சர் விஜயதாஸ



மத நல்லிணக்கம் மற்றும் இன நல்லிணக்கம் நாட்டில் கட்டி எழுப்பப்பட்டுள்ள நிலையில் அதனை சீர்குலைக்க முயல்வோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே நீதி அமைச்சர் விஜேதாஸராஜபக்ஷ இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், ஸ்ரீதலதா மாளிகையை அவமதிக்கும் வகையில் கருத்து தெரிவித்த நபருக்கு தண்டனைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீ தலதா மாளிகை இலங்கை மக்களின் கௌரவத்தை மட்டுமின்றி முழு உலகினதும் கௌரவத்தைப் பெற்றுள்ள முக்கிய தலமாகும்.

அந்த வகையில் அதன் கௌரவத்துக்கு பங்கம் ஏற்படும் வகையிலோ அவமதிப்பு ஏற்படும் வகையிலோ கருத்துக்களை வெளியிடுவதற்கு எவருக்கும் இடமளிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது இன, மத பேதமின்றி மக்கள் மத்தியில் சிறந்த நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

அனைத்து மதங்களுமே தனது மதங்களை மதித்து செயற்படுவதுடன் அனைத்து மதங்களும் அஹிம்சை வழியையே போதிக்கின்றன.

அந்த வகையில் மத நல்லிணக்கத்தை சிதைக்கும் வகையில் சமூக வலைத்தளங்கள் மூலம் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட எவரும் அதற்கு இடமளிக்கப் போவதில்லை. அவ்வாறு செயற்படும் நபருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அவ்வாறு பௌத்த மதம் மட்டுமின்றி எந்த மதத்திற்கு எதிராகவும் எந்த மத நம்பிக்கைக்கு எதிராகவும் செயற்படும் நபருக்கு எதிராக தண்டனைச் சட்டக் கோவை கீழ் சட்டம் நிறைவேற்றப்படும் எனவும் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# தலதாமாளிகையையும் பௌத்த மதத்தையும் அவமதித்த குற்றச்சாட்டில் கைதானவரிடம் சி.ஐ.டியினர் விசாரணை!



தலதா மாளிகையை அவமதித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சேபால அமரசிங்க தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தலதாமாளிகையையும் பௌத்த மதத்தையும் அவமதிக்கும் வகையில் செயற்பட்டதன் மூலம் சட்டரீதியான குற்றத்தை இழைத்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, மேலதிக விசாரணைகள் மற்றும் தேவையான மேலதிக நடவடிக்கைகளுக்காக சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஸ்ரீ தலதாவை அவமதித்த சந்தேக நபர் தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கு கிடைத்த முறைப்பாடு விசாரணைக்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போதே சந்தேகநபர் பெல்லன்வில பிரதேசத்தில் வைத்து வியாழக்கிழமை இரவு கைது செய்யப்பட்டிருந்தார்.

# கல்விப் புரட்சி மூலம் மலையகத்தில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்துவேன்!

## திருமுருகன் சபதம்



கல்விப் புரட்சி மூலம் மலையகத்தில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்துவேன். அதற்கான ஒரு பாலமாக அரசியலையும் பயன்படுத்துவேன். எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் எனது பிரதிநிதிகளை நிறுத்துவேன் என்று ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் நுவரெலியா தொகுதி அமைப்பாளரும், விஷ்ணு ஆரோஹனம் அமைப்பின் தலைவருமான ச.திருமுருகன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

2017 ஆம் ஆண்டில் விஷ்ணு ஆரோஹனம் எனும் அமைப்பை ஆரம்பித்தேன். அதனூடாக மலையகத்தில் கல்வித்திட்டங்கள் மற்றும் சத்துணவு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தற்போதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் எனது சேவையைப் பாராட்டி ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன எனக்கு சுதந்திர கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் பதவியை வழங்கினார். தற்போது தொகுதி அமைப்பாளராகச் செயற்பட்டு வருகின்றேன்.

மலையக மக்களுக்கான எனது சேவைகளை, வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அரசியலும் ஒரு பாலமாக அமையும் என்பதால் பதவியை ஏற்று செயற்பட்டு வருகின்றேன். எதிர்காலத்தில் அரசியலிலும் வென்று, மக்கள் சேவையை தொடர்வேன்.

அதேவேளை, உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நான் போட்டியிட மாட்டேன். எமது கட்சியின் சார்பில் நபர்கள் நிறுத்தப்படுவார்கள். மாகாண சபை தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டால், அதில் போட்டியிடுவது சம்பந்தமாக எனது நிலைப்பாடு அறிவிக்கப்படும்.

மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீண்டகால வேலைத்திட்டங்கள் உள்ளன. அவை தொடர்பில் விரிவான கலந்துரையாடல்களும் அவசியம். எனினும், கல்வி மேம்பாடு மூலம் விரைவில் மாற்றத்தை நோக்கிப் பயணிக்கலாம். அதையே தற்போது நான் செய்து வருகின்றேன் . – என்றார்.

# மது போதையில் தாயைத் தாக்கிய மகனைக் கொலை செய்த தந்தை!

## அநுராதபுரத்தில் சம்பவம்

மதுபோதையில் வீட்டுக்கு வந்து தாயை தாக்கிய மகன் தந்தையின் தாக்குதலில் உயிரிழந்துள்ளார் என அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவத்தில் 25 வயதான இளைஞரே உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் தனது தந்தை, தாய் மற்றும் உறவினர்களுடன் வசித்து வருகின்றேன் எனவும், 10 ஆண்டுகளுக்கு முன்பு வாகன விபத்தில் அவரது வலது கால் பகுதி அகற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்ட இளைஞர் தினமும் மதுபோதையில் வீட்டுக்கு வந்து தனது தாய், தந்தை மற்றும் சகோதரர்களை தாக்கி வந்தார் எனவும் சம்பவம் இடம்பெற்ற தினம் இரவும் மது அருந்தி விட்டு வந்து தனது தாயை தாக்கியபோது தந்தை அவரைத் தாக்கியதால் உயிரிழந்தார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# தூக்கில் தொங்கிய நிலையில் வடமராட்சியில் சடலம் மீட்பு!

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டு பகுதியில் வியாழக்கிழமை இரவு குடும்பஸ்தர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இரண்டு பிள்ளைகளையுடைய 49 வயதான குடும்பஸ்தரே இவ்வாறு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

வியாழக்கிழமை இரவு 11.30 மணி அளவில் அவர் வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டவேளை அயலவர்களால் மருதங்கேணி பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு நேற்று (வெள்ளிக்கிழமை) வந்த மருதங்கேணி பொலிஸார் சடலத்தை பார்வையிட்டதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நீதிமன்ற நடவடிக்கைகளின் பின் சடலம் பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

# தாய்லாந்து, இந்தியா, சீனாவுடன் இலங்கை முக்கிய வர்த்தக பேச்சுகளை மீள ஆரம்பிப்பு!



இந்தியா,சீனா,தாய்லாந்துடன் இலங்கை வர்த்தக பேச்சுகளை ஆரம்பிக்கவுள்ளது.

தனது பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதற்காக உலக நாடுகளுடன் பொருளாதார உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் துரிதமாக ஈடுபட்டுள்ள நிலையிலேயே இலங்கை இந்த மூன்று நாடுகளுடனும் பேச்சுகளை ஆரம்பிக்கவுள்ளது.

2018 இல் இடைநிறுத்தப்பட்ட பேச்சுகளை மீள ஆரம்பிப்பதற்காக தாய்லாந்து அதிகாரிகள் திங்கட்கிழமை இலங்கை வரவுள்ளனர் என சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பாக இலங்கையின் சார்பில் பேச்சுகளில் ஈடுபடும் முக்கிய அதிகாரி கே.ஜே. வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மிகப்பெரிய வர்த்தக பங்காளிகளான இந்தியா, சீனாவுடனான பேச்சுகள் பெப்ரவரி மார்ச்சில் ஆரம்பமாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிப்பது முதலீட்டைக் கவர்வது தொடர்பாகக் கவனம் செலுத்தப்படுவதாகத் தெரிவித்துள்ள அவர், இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இது அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

2023 அல்லது 2024 ஆம் ஆண்டு ஆரம்பத்துக்குள் இந்தப் பேச்சுகளை முடிவிற்கு கொண்டுவருவதே எனது நோக்கம் என கே.ஜே. வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் காரணமாக இந்தப் பேச்சுகள் பாதிக்கப்பட்டன. நாங்கள் பேச்சுகளுக்காக சென்றுகொண்டிருக்கின்றோம் என தாய்லாந்து அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

# லாப் காஸ் சமையல் எரிவாயு விலையும் குறைக்கப்பட்டது!

லாப் காஸ் சமையல் எரிவாயு நிறுவனம் உள்நாட்டு எரிவாயு விலையைக் குறைக்க முடிவு செய்துள்ளது. அதன்படி, கொழும்பு மாவட்டத்தில் 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 5,080 ரூபா என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. அத்துடன், கொழும்பு மாவட்டத்தில் 5 கிலோ கிராம் லாப் காஸ் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 2,032 ரூபாவாகும்.

மேலும், மற்றைய மாவட்டங்களுக்கான புதிய விலைகளை அறிந்துகொள்ள வாடிக்கையாளர் சேவை இலக்கமான 1345 ஐ தொடர்புகொள்ளுமாறு நிறுவனம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## 13க்கு வலுக்கும் அழுத்தம்

**நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய முயற்சிக்கு ஒத்துழைக்க இணங்கியுள்ள தமிழர் தரப்புகள், அது தொடர்பில் சில முன்னறிவித்தல்களையும் கொடுத்திருக்கின்றன.**

**ஒருபுறம் தேசிய இனப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வை எட்டும் முயற்சியை முன்னெடுக்கும் அதே சமயம், உடனடிப் பிரச்சனைகள் சிலவற்றையும் விரைந்து தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தமிழர் தரப்பு சுட்டிக்காட்டிய விடயங்களுக்குள் அடங்குகிறது.**

**அதற்குள் பிரதானமானது 13ஆவது அரசமைப்பு திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள முழு அதிகாரங்களையும் மீளளித்து, அந்தச் சபைகளை கட்டுறுதி உள்ளவையாக இயக்க வேண்டும் என்பதாகும்.**

**13 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வு பௌத்த – சிங்கள தரப்புகளினால் சின்னா பின்னமாக்கப்பட்டுக் கிடக்கின்றது. அதை மீளச் சீரமைத்துக் கொடுங்கள் என்பதும் இலங்கை தமிழர் தரப்பின் பிரதான கோரிக்கைகளில் ஒன்று.**

**13 ஆவது திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வின் முழு நடைமுறையாக்கமே தமிழர் தரப்பில் இப்போது இங்கே வலியுறுத்தப்படுகின்றது என்று பார்த்தால், அதே சமய சந்தர்ப்பத்தைப் பாவித்து, தமிழகத்தில் இயங்கும் – இலங்கைத் தமிழர் பக்கத்துக்கு ஆதரவும் பரிவும் தந்து செயல்படும் – தரப்புகளும் அதே விடயத்தை வலியுறுத்த புறப்பட்டிருக்கின்றன.**

**சென்னையில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் ஏனையோரோடு சேர்ந்து நேற்று நடத்திய ஆய்வு மாநாடு அதனையே கோடி காட்டுகின்றது.**

**13 ஆவது திருத்தத்தின் முழு நடைமுறையாக்கத்துக்கு தமிழக அரசு மற்றும் இந்திய மத்திய (ஒன்றிய) அரசுக்கு தமிழகத் தலைவர்கள் ஒன்றிணைந்து அழுத்தம் கொடுக்கும் நோக்கத்துடன் இந்த மாநாடு நடத்தப்பட்டு இருக்கின்றது.**

**இலங்கையின் இப்போதைய தீர்வு முயற்சி நடவடிக்கைகள் முன்னகராமல் இடையில் துவண்டு போனாலும் –**

**13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை முழுமையாக மீளளிக்க கோரும் வற்புறுத்தல் இலங்கையையும் தாண்டி, இந்தியாவின் உள்வீட்டு விவகாரமாக மாறி, தொடர்ந்து கொழும்புக்கு அழுத்தம் தரும் என்று நம்பலாம்.**

**திருமாவளவன் தலைமையிலான – மனித உரிமைகள் அடிப்படையிலான சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு – சென்னையில் ஆரம்பித்திருக்கும் செயற்றிட்டம் இந்த நம்பிக்கையை தந்திருக்கின்றது.**

# புதிய வரிகள் அதிகரிப்பு அமுலானால் போராட்டம்!

## தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

உத்தேசித்துள்ள சம்பளம் ஈட்டும்போது வரி திருத்தங்களை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்தால் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாக வைத்தியர்கள், வங்கியாளர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் குழுக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன. புதிய வரித்திட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்தினால் நாளை (ஞாயிற்றுக்கிழமை) முதல் தொடர் போராட்டங்களில் ஈடுபடப் போவதாக பல தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

நாட்டின் நலனுக்காக உழைக்கும் தொழில் வல்லுநர்களுக்கு உத்தேச வரிகள் நியாயமற்றவை என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, அரச ஊழியர்களால் பெறப்படும் கடனுக்கான வட்டி வீதத்தை அதிகரிக்க இலங்கை மத்திய வங்கி எடுத்த தீர்மானத்துக்கு எதிராக, இலங்கை நிதாஹஸ் சேவக சங்கமயாவுடன் இணைந்த சுகாதாரத் துறை ஊழியர்கள் ஜனவரி 9ஆம் திகதி சுகவீன விடுமுறையில் செல்ல தீர்மானித்துள்ளனர்.

# சோளச் செய்கைக்கான வயல்விழா வவுனியாவில்!



வவுனியா காயங்குளம் கிராமத்தில் இடம்பெற்ற வயல்விழாவில் சோள செய்கையால் கிடைக்கக் கூடிய பயன்கள், குறைந்த செலவில் அதிக இலாபத்தை ஈட்டும் வழிமுறைகள் தொடர்பில் விவசாயிகளுக்கான விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இதன்போது சோள செய்கையில் ஈடுபட்ட விவசாயினால் சிறிய இயந்திரங்கள் ஊடாக மண்ணை பண்படுத்தும் முறைகள் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டதுடன் அப்பகுதி மக்களுக்கும் அதன் நன்மைகள் தொடர்பிலும் நோய் தாக்கங்கள் தொடர்பாகவும் விளக்கம் கொடுக்கப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் மாகாண பிரதி விவசாய பணிப்பாளர் பி.அற்புதசந்திரன், பாடவிதான உத்தியோகத்தர் அ. சுயேந்திரா, விவசாய போதனாசிரியர் அபிரான் உட்பட விவசாய திணைக்கள அதிகாரிகள், கிராம சேவகர், அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கைக்கு ஆதரவளிப்பதாக ஆஸி. மீண்டும் உறுதியளிப்பு!



சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்களிலும் பாரிஸ் கிளப் கூட்டங்களிலும் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக ஆஸ்திரேலியா உறுதியளித்துள்ளது.

ஆஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ் மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தனவிற்கிடையில் வியாழக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டு மாணவர்களை மட்டுமின்றி, ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளிலிருந்தும் மாணவர்களை ஈர்க்கும் வகையில் ஆஸ்திரேலிய பல்கலைக்கழகங்கள் இலங்கையில் இணைந்த வளாகங்களை நிறுவ முடியும் எனவும் பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.





தற்போதைய பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்ள, குறிப்பாக சுமார் 7 கோடியே 50 லட்சம் ஆஸ்திரேலிய டொலர் பெறுமதியான மருந்து மற்றும் அத்தியாவசிய பொருள்களை இலங்கைக்கு வழங்கியமைக்காக பிரதமர் ஆஸ்திரேலியாவுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்களிலும் பாரிஸ் கிளப் கூட்டங்களிலும் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக உயர் ஸ்தானிகர் ஸ்டீபன்ஸ் உறுதியளித்துள்ளார்.

# தங்க ஆபரணங்கள் இறக்குமதியை கட்டுப்படுத்த விசேட வர்த்தமானி!

22 கரட்டுக்கு மேற்பட்ட தங்கத்தை ஆபரணங்களாக இறக்குமதி செய்வதை கட்டுப்படுத்தும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவினால் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தங்கம் கடத்தலை தடுக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு அரச சொத்துக்களை பயன்படுத்தாதீர்!

## தேர்தல் ஆணைக்குழு வலியுறுத்தல்

அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் அரசமைப்பு சபையுடன் தொடர்புடைய நிறுவனங்களின் சொத்துக்களை தேர்தல் காலப்பகுதிக்குள் சட்டத்துக்கு முரணாகப் பாவிப்பதை தவிர்த்துக் கொள்வதோடு, தற்போதுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான அதிகாரிகள் , ஊழியர்களை இணைத்துக் கொள்வதை மட்டுப்படுத்துமாறு தேர்தல் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் –

கடந்த 4 ஆம் திகதி 340 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் தொடர்பில் அறிவிக்கப்பட்டது. அன்றிலிருந்து தேர்தல் நடத்தப்பட்டு இறுதி முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கிடையிலான காலப்பகுதி தேர்தலுக்கான காலம் என்று அடையாளப்படுத்தப்படுகிறது. இந்தக் காலப்பகுதிக்குள் அரசியல் கட்சிகள், குழுக் கள் என்பன வேட்பாளர்கள் தொடர்பில் பிரசாரங்கள் மேற்கொள்ளல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு அரச சொத்துக்களை உபயோகிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

தேர்தல் இடம்பெறவுள்ள மாவட்டங்களில் அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு பதவி உயர்வு , இடமாற்றம் உள்ளிட்ட செயற்பாடுகளும் மட்டுப்படுத்தப்பட வேண்டும். இது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு அரச சொத்துக்களுக்குப் பொறுப்பான அமைச்சுக்களின் செயலாளர்கள் , திணைக்கள பிரதானிகள் உள்ளிட்ட




அனைவரிடமும் வலியுறுத்துகின்றோம்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் 104 (ஆ) (4) (அ) உறுப்புரைகளுக்கமைய அரச சொத்துக்களை தேர்தல் பிரசார பணிகளுக்காக உபயோகிப்பதற்குத் தடை விதிக்கும் அதிகாரம் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ளது. அந்த உறுப்புரையின் (ஆ) பிரிவிற்கமைய ஆணைக்குழுவால் விதிக்கப்படும் கட்டளைகளுக்கு அனைத்து தரப்பினரும் இணங்க வேண்டும்.

மாறாக, அவற்றை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டு, அக்குற்றம் நிரூபிக்கப்பட்டால் 3 ஆண்டு சிறை தண்டனை அல்லது ஒரு லட்சம் ரூபா தண்டப்பணம் அல்லது இரு தண்டனைகளும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கந்தளாய் சீனி தொழிற்சாலையின் களஞ்சியசாலை உடைத்து திருட்டு!

## ஓட்டோவுடன் மூவர் கைது

பல வருடங்களாக மூடப்பட்டிருந்த கந்தளாய் சீனி தொழிற்சாலையின் களஞ்சியசாலையை உடைத்து பித்தளை குழாய்கள் மற்றும் செப்பு பாகங்களை திருடி ஓட்டோவில் கொண்டு சென்ற மூவர் கைது செய்யப்பட்டனர் என அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் சீனி தொழிற்சாலைக்கு அருகில் வசிப்பவர்கள் எனவும், இவர்களுக்கு சீனி தொழிற்சாலையின் பாதுகாப்பு பிரிவினரின் ஒத்துழைப்புக் கிடைத்துள்ளதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைப்பற்றப்பட்ட அனைத்தும் புத்தம் புதிய பயன்படுத்தப்படாத பித்தளை குழாய்கள், செப்பு குழாய்கள் போன்றவை என்றும், அவற்றில் வரிசை எண்கள் கொண்ட குறிச்சொற்கள் இருக்கின்றன எனவும் பொலிஸார் கூறுயுள்ளனர்.

# 10 வயது சிறுவன் கடத்தல் ஹேனமுலவில் பெண் கைது!

கொழும்பு – கிராண்பாஸ் பகுதியில் 54 வயதுடைய நபரொருவரையும், 10 வயது சிறுவனொருவனையும் கடத்திச் சென்றமை தொடர்பில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நீர்கொழும்பு பிரதேசத்தில் வசிக்கும் இளைஞன் ஒருவர், கிராண்பாஸ் பிரதேசத்துக்கு வருகை தந்து அந்த பகுதியில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் பெண்ணொருவரிடமிருந்து நச்சுத்தன்மையான போதைப்பொருளைக் கொள்வனவு செய்துள்ளார்.

அந்தப் போதைப்பொருள் ஹெரோயின் என சந்தேகிக்கப்படுகிறது. இதன் போது குறித்த இளைஞனால், போதைப் பொருளை விற்பனை செய்த பெண்ணுக்கு முழுமையான பணம் வழங்கப்படாமல் , எஞ்சிய தொகையை பின்னர் வழங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



எஞ்சிய பணம் கிடைக்கப் பெறாமையால் அந்தப் பெண் ஓட்டோ ஒன்றில் நீர்கொழும்பில் உள்ள இளைஞனின் வீட்டுக்குச் சென்று அவரின் தந்தையான 54 வயதுடைய நபரொருவரையும் , சகோதரியின் மகனான 10 வயது சிறுவனையும் கிராண்பாஸ் பிரதேசத்திலுள்ள தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார். பின்னர் சிறுவனை தன்னுடன் வைத்துக் கொண்டு தந்தையை வீட்டுக்கு அனுப்பியுள்ளார். போதைப் பொருள் பெற்றமைக்கான எஞ்சிய பணத்தைக் கொடுத்து விட்டு, பின்னர் சிறுவனை அழைத்துச் செல்லுமாறும் கோரியுள்ளார். இது தொடர்பில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் முன் னெடுக்கப்பட்ட நிலையில், சிறுவன் மீட்கப் பட்டுள்ளார். இதன்போது சம்பவத்துடன் தொடர்புடைய 43 வயதுடைய ரந்திய உயண ஹேனமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளார். – என்றார்




# நாட்டில் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு 10,000 புற்றுநோயாளர் ஆபத்தான நிலையில்!

## அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

15 முக்கிய புற்றுநோய் மருந்துகளுக்;கான தட்டுப்பாடு காரணமாக 10 ஆயிரம் புற்றுநோயாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

புற்றுநோயாளிகளுக்கு 15 பிரதான வைத்தியசாலைகள் சிகிச்சை அளிக்கின்றன 90 வீதமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்றது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜயந்த பண்டார தெரிவித்துள்ளார். நாங்கள் சுகாதார அமைச்சுக்கு இது தொடர்பாக அறிவித்துள்ளோம், இதனுடன் தொடர்புபட்ட வேறு தரப்பினரும் இது தொடர்பாக அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர், எனினும் ஆபத்தில் சிக்குண்டுள்ள மக்களைக் காப்பாற்ற சுகாதார அமைச்சு எதனையும் செய்யவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆரம்பகட்டத்திலேயே கண்டுபிடித்தால் புற்றுநோயைக் குணப்படுத்தலாம், கிகிச்சை தாமதமானால் அது பரவும். மருத்துவர்களால் எதனையும் செய்ய முடியாது எனவும் குறிப்பிட்டுள்ள அவர், தனியாரிடமிருந்து மருந்துகளை பெறுமாறு எங்களால் எங்கள் நோயாளிகளை கேட்கமுடியும்,ஆனால் எங்கள் நோயாளிகளில் 90 வீதமானவர்களால் அது முடியாது மருந்துகளின் விலை 50 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகம் எனவும் அவர் குறிபிட்டுள்ளார்.

# பஸ்ஸுக்குள் கடற்படை தாதி ஒருவரின் உடலில்சாய்ந்து துன்புறுத்திய வைத்தியர்!

## பயணிகளால் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைப்பு

பஸ்ஸுக்குள் கடற்படை தாதி ஒருவரின் உடலில் சாய்ந்து துன்புறுத்தினார் என்ற சந்தேகத்தில் வைத்தியர் ஒருவரைக் கைதுசெய்துள்ளதாக தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட கமெரா பொருத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி மூலம் வைத்தியர் தாதியை வீடியோ எடுத்துள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டதாக பிரதேசத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட 34 வயதுடைய சந்தேக நபர் மேல் மாகாணத்தில் உள்ள போதனா வைத்தியசாலை ஒன்றில் பணிபுரிபவராவார் கடற்படையில் பணிபுரியும் தாதி இது தொடர்பில் பயணிகளுக்கு தெரிவித்ததையடுத்து, பயணிகள் குழுவொன்று வைத்தியரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளது.

சந்தேக நபர் மதுபோதையில் இருந்தமை தெரியவந்ததையடுத்து, கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைத்தியர் முன்னிலையில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர் மதுபோதையில் இருந்தமை மருத்துவ அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படை தாதியும் இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

# கடிதங்களின் 'மை' காய்வதற்குள் நியமனங்களை இரத்துச் செய்தாராம் ஊவா ஆளுநர் முஸம்மில்!

ஊவா மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மில் நியமனக் கடிதங்களின் 'மை' காய்வதற்குள் நியமனங்களை இரத்துச் செய்துள்ளார் என ஆசிரியர் சங்கத்தின் உப தலைவரும் ஊவா மாகாண செயலாளருமான பிரியந்த வருசமான தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

கடந்த டிசெம்பர் 30 ஆம் திகதி ஊவா மாகாண ஆளுநரின் தலைமையில் ஊவா மாகாண சபை கேட்போர் கூடத்தில் நிர்வாக சேவையில் 17 நியமனங்களுக்கான கடிதங்கள் வழங்கப்பட்டன.

ஆனால் ஊவா மாகாண ஆளுநர் அன்றைய தினம் மாலையே அரச நிர்வாக சேவையின் பதவிகள் தவிர்ந்த கல்வி நிர்வாக சேவையின் சகல பதவிகளுக்கான நியமனங்களையும் இடமாற்றங்களையும் இரத்துச் செய்திருந்தார் எனத் தெரிவித்துள்ளார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்




**1. உரலார் கேள்வி:-** இதுநாள் வரை தமிழ், சமயம் என்ற வட்டங்களுக்குள் நின்றீர்கள். அதனால் உங்களை எல்லோரும் நேசித்தார்கள். இப்போது சமூகம், அரசியல் என எல்லா விடயங்களிலும் கைவைக்கப் போய், பலரும் உங்களைத் திட்டுகிறார்கள். வீணாக உங்களுடைய 'இமேஜ்' கெடுகிறது. தமிழ், சமயம் சார்ந்த உங்களுக்கு மற்ற விடயங்கள் தேவைதானா?

**உலக்கையார் பதில்:-** உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதுநாள் வரை நான் பேசியது, எழுதியது எல்லாம் என்னுடைய 'இமேஜை' வளர்ப்பதற்காக அல்ல. தர்மத்தினதும், தமிழினதும், தமிழ் இனத்தினதும் 'இமேஜை' வளர்ப்பதற்காகத்தான்.

சமூகத்தில் யாராவது ஒருவர், ஏதேனும் ஒரு ஆற்றலால் கொஞ்சம் உயர்ந்துவிட்டால், அவருக்குப் புகழ் வந்துவிடுகிறது. அந்தப் புகழால் வரும் மரியாதையைத்தான் நாம் 'இமேஜ்' என்கிறோம். அப்படி ஒரு 'இமேஜ்' வந்துவிட்டால், அதன் பின்னர் தமக்கான அந்த 'இமேஜைப்' பாதுகாத்துக் கொள்வதையே தமது முழுநேர வேலையாக்கிக் கொள்கின்றனர் பலர். ஒரு சிலர் அப்படி நினைக்காவிட்டாலும் உங்களைப் போன்றோர் அவர்களையும் அப்படி நினைக்கவைத்து விடுகிறார்கள்.

எனக்கு அதில் உடன்பாடில்லை! தமிழால்தான் எனக்குப் பெருமை கிடைத்தது. அந்தத் தமிழ், இறை நம்பிக்கையையும், அறத்தினையும், அன்பினையும், சமூக அக்கறையையும் தான் எனக்குப் போதித்திருக்கிறது. தமிழ் போதித்த அந்த விடயங்களுக்கு இழுக்கு வரும்போது நான் எப்படிப் பேசாதிருப்பது? தமிழின் இமேஜா? எனது இமேஜா? என்ற கேள்வி வரும்போது நான் எனது 'இமேஜை' இழந்தேனும் தமிழின் இமேஜைப் பாதுகாக்கவே விரும்புவேன்.

சட்டம் படித்தவர்கள், மருத்துவம் படித்தவர்கள், பொறியியல் படித்தவர்கள் எனப் பலரும் அரசியல் பற்றிப் பேசுகிறார்கள். அதனை யாரும் குற்றம் சொல்வதில்லை. தமிழ், சமயம் படித்தவர்கள் மட்டும் அரசியல் பேசினால் அதனைத் தவறென்கிறார்கள். இது ஏனென்று எனக்குப் புரியவில்லை. சொல்லப் போனால், முன் சொன்னவர்களை விடத் தமிழ், சமயம் படித்தவர்களுக்குத்தான் சமூகத்தை அளக்கும் ஆற்றல் அதிகம் இருக்கும் என்பதில் ஐயத்திற்கிடமில்லை.

ஓர் அரசை எதிர்த்து நின்றான் கம்பன். போருக்கு நின்ற மூவேந்தரின் முன்னால் சென்று நின்று நீதியை நிலைநிறுத்தினாள் ஔவை. பாண்டிநாட்டிற்குள் புகுந்து, விபூதியால் சைவத்தைக் காத்தருளினார் சம்பந்தர். பாரதி, வா.வே.சு. ஐயர் என இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் குதித்துப் புகழ் கொண்ட தமிழறிஞர்கள் பலபேர். இவர்கள் எல்லாம் தங்களின் 'இமேஜை' மட்டும் காக்க நினைத்திருந்தால், இன்று நம் தமிழினத்திற்குப் பெருமை வந்திராது.

இப்படியாய் அரசியல், சமூக விடயங்களில் தலையிட்டு நீதியை நிலைநாட்டியவர்கள்தான் நம் தமிழ், சமய அறிஞர்கள். அவர்களும் பல இன்னல்களைச் சந்தித்தார்கள். ஆனால் காலம் இன்றுவரை அவர்களைத்தான் போற்றி நிற்கிறது. காலம் போற்றுவது, தூற்று வது பற்றிக்கூட எனக்குக் கவலையில்லை. எனது 'நெஞ்சுக்கு நீதியாக' நான் இருக்க விரும்புகிறேன். அவ்வளவே!

**சல்லடையாரின் சலிப்பு ∗ இவர் என்னத்தைச் சொல்லி என்ன பயன்? உலகம் உண்மையை உணரவா போகிறது?**

**2. உரலார் கேள்வி: -** இனப்பிரச்சினை தீர்வு பற்றிய பேச்சுவார்த்தை உருப்படும் என்று நினைக்கிறீர்களா?

**உலக்கையார் பதில்:-** உருப்பட விடுவார்களானால் உருப்படலாம்! (இரண்டு பகுதியினரையும் தான் சொல்கிறேன்.)

**சல்லடையாரின் சலிப்பு ∗ அது உருப்பட்டால் இவங்கள் உருப்படுறது எப்படியாம்?**

**3. உரலார் கேள்வி :-** உங்கள் பதில்களைப் படித்துவிட்டு, உங்களை இந்துசமய வெறியன் என்றும், பிறமத வெறுப்பாளன் என்றும் சிலர் கூறுகிறார்களே. அது உண்மையா?

**உலக்கையார் பதில்:-** எப்படியேனும் என்னைச் சமூகத்தின் முன் குற்றவாளியாக்க விரும்பும் சிலபேர் தான் அப்படிச் சொல்லி வருகிறார்கள். அவர்களுக்கு என்னையும் தெரியவில்லை. இந்து சமயத்தையும் தெரியவில்லை என்பதுதான் உண்மை.

'அன்பே சிவம்' என்ற கொள்கையைக் கொண்டது தான் இந்து சமயம். அத்தகைய சமயம் எவரையேனும் வெறியனாக்குமா? இந்து சமயம்தான் என்று இல்லை. வேறெந்த உண்மைச் சமயமும் கூட, நிச்சயம் ஒருவரையும் வெறியராக்காது.

மனித இதயங்களைச் சமைப்பதுதான் சமயங்களின் வேலை. சமைத்தல் என்ற சொல்லுக்குப் பக்குவப்படுத்தல் என்று அர்த்தம். அதனால்தான் உணவைச் சமைப்பது என்று சொல்கிறோம்.

இறைவன் ஒருவனே என்று உணர்ந்தவர்களிடம், சமய பேதம் நிச்சயம் பிறக்காது. அதை நான் நன்கு உணர்ந்திருக்கிறேன். ஒவ்வொரு இனமும் தத்தம் அனுபவத்திற்கும், அறிவிற்கும் ஏற்ப இறைவனைக் காணத் தலைப்பட்ட பாதைகள்தான் சமயங்கள். அவரவர்க்கு அவரவர் பாதை சிறந்தது. இதை உணர்ந்த எவரும் மற்றவர் சமயத்தை இழிவு செய்யமாட்டார்கள்.

எனது சமயம் உயர்ந்தது என்று நான் சொல்வதை, சில பேர் 'சமயவெறி' எனக் கொள்கிறார்கள். அது தவறு! என் தாய் அழகி என்று சொல்வதன் அர்த்தம், மற்றவனின் தாய் அழகற்றவள் என்பதல்ல.

அதே நேரத்தில் இன்னொன்றையும் உறுதிபட நான் சொல்லுவேன். ஒருக்காலும் இன்னொருவர் தாயை அழகற்றவள் என நான் மறந்தும் சொல்லமாட்டேன். அதுபோலவே எனது தாயை அழகற்றவள் என்று சொல்ல, வேறெவரையும் எக்காரணம் கொண்டும் அனுமதிக்கவும் மாட்டேன். இதுதான் எனது சமயப் பாதை.

**சல்லடையாரின் சலிப்பு ∗ வாரிதியார் தன்னிலை விளக்கம் சொல்லவில்லை. இந்து சமயத்தின் உயர்நிலையைச் சொல்லியிருக்கிறார் போல. என்னத்தைச் சொல்லி என்ன பயன்? உவங்களுக்கு உதெல்லாம் விளங்கவே போகுது?**

**4. உரலார் கேள்வி:-** எங்கேயோ ஒரு புலம்பெயர் நாட்டிலிருந்து 'ஈழத்தமிழன் ஜீவன்' என்பவர் நீங்கள் 'டான் ரீ.வி'க்கு அளித்த பேட்டியை கடுமையாய் விமர்சித்து வெளியிட்டிருந்த youtube videoஐ பார்த்தீர்களா?

**உலக்கையார் பதில்:-** அன்பர்கள் அப்பேட்டியை என் கவனத்திற்குக் கொண்டு வந்ததால் பார்க்கமுடிந்தது.

அப்பேட்டியின் ஆரம்பத்தில் அவர் எனக்கு அளித்திருந்த பாராட்டிற்கு முதலில் நன்றிகளைச் சொல்லிவிட்டு உள்ளே வருகிறேன்.

அவருக்கு வார்த்தைகள் அடுக்கி வருகின்றன. கருத்தில் அத்தொடர்ச்சி இல்லை. முன்னுக்குப்பின் முரணாக நிறையப் பேசுகிறார். அவருடைய மற்றைய சில வீடியோக்களையும் பார்க்க முடிந்தது. தன்னை ஓர் ஈழப்போராட்ட ஆதரவாளனாகக் காட்டும் முயற்சியையே, அவர் தொடர்ந்து செய்து வருகிறார். அம்முயற்சிக்காக மற்றவரையெல்லாம் தன்னால் முடிந்த அளவு இழிவுசெய்கிறார். இந்த வார்த்தை விளையாட்டுக்களைத் தவிர, ஈழப்போராட்டத்திற்கு அவர் தந்த பங்களிப்பு அல்லது ஈழமக்களின் வளர்ச்சிக்கு அவர் தந்த பங்களிப்பு ஏதேனும் இருக்கிறதா? என்று தெரியவில்லை. அவரது கருத்துக்களில் இருந்த சில பிழைகளை மட்டும் கீழே சுட்டிக் காட்டுகிறேன்.

∗ நான் அரசியலில் குதித்து விட்டதாய்ச் சொல்கிறார். - அதை வைத்து இம் மண்ணோடு அவருக்குத் தற்போது இருக்கும் தொடர்பின்மையைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

∗ நடுநிலை என்பதே பொய் என்கிறார். - அப்படியானால் 'நடுவுநிலைமை' என்ற அதிகாரத்தைத் தனது குறள் நூலில் வைத்த பொய்யாமொழிப் புலவரும் பொய்மொழிப் புலவர் ஆகிவிடுவார்.

சைவம், இந்து என்பவற்றில் எது சரி? என்பது பற்றி என்னிடம் கேட்டபோது, இந்து என்கின்ற பெரிய வட்டம் சைவர்களாகிய நமக்குப் பலம் செய்யும் என்று சொல்லியிருந்தேன். அது தவறாம்! எனக்கென்று ஒரு அப்பன் இருக்க, வேறெவரையும் அப்பனாய்ச் சொல்ல வேண்டிய தேவை என்ன? என்று கேட்கிறார். நண்பர் ஜீவன் யாழ்ப்பாணத்தில் ஏதோ ஒரு ஊரில்தான் பிறந்திருப்பார். அவர் பாஷையிலேயே சொல்வதானால், அந்த ஊரின் பெயர்தான் அவர் அப்பனின் பெயராய் இருக்க வேண்டும். அப்படியிருக்க அவர் 'ஈழத்தமிழன் ஜீவன்' என்று ஏன் ஒரு பெரியவட்டத்திற்குள் தன்னை அடையாளப்படுத்த முயல்கிறார்? என்பது கேள்வி.

∗ நான் இந்துத்துவாவிற்கு வேலை செய்கிறேனாம். - எல்லாச் சமயத்தவர்களும் தத்தம் சமயத்தை வளர்க்கப் பாடுபடும் போது, இந்துவாகிய நான் எனது சமயத்தை வளர்க்க நினைப்பதில் என்ன தவறு? இந்துசமயத்தை வளர்த்தெடுக்கும் முயற்சியையே இந்துத்துவாவாக நான் நினைத்திருக்கிறேன்.

∗ ஈழப்போரில் நாங்கள் தோற்கவில்லையாம். - அப்படியானால் இந்த மண்ணைவிட்டு, இந்த இனத்தைவிட்டு, தேசங்கடந்து நண்பர் ஓடியதன் காரணம் என்ன? அவர் சொன்னதை ஏற்பதானால், இன்றைய நமது நிலையின் பெயர் என்ன? எம்மை வென்றவர்கள் என்பதா? யதார்த்தத்தை ஏற்க மறுப்பவன் மூடன். சகோதரர் அந்த வரிசையில் சேரமாட்டார் என்று நினைக்கிறேன்.

நிறைவாக, இங்கிருந்து வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடி, அங்குள்ள வசதிகளைப் பெற்று வாழுகின்ற நண்பர் ஜீவனைப் போன்றவர்கள், அங்கு தம்மை அடையாளப்படுத்த ஈழப்போரினை ஒரு கருவியாய்க் கையில் எடுத்துக் கொள்கிறார்கள். அதனைக் கையில் எடுப்பதால் வருமானத்தை உண்டாக்கிக் கொள்வதே அவர்களது நோக்கமாய் இருக்கிறது. பாவம்! ஜீவனும் என் போன்றவர்களைத் திட்டித் தனது வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார் போல. வாழ்ந்து போதீரே! என்று சொல்வதைவிட எதனை நான் சொல்ல.

**சல்லடையாரின் சலிப்பு ∗ என்னத்தச் சொல்ல? இப்படி அலட்டிறதத் தவிர இவங்களால வேறொண்டுமே செய்ய முடியாது. சூரியனைப் பார்த்து குலைக்கிற நாய் குலைச்சுக் கொண்டே தான் இருக்கும். பேசாமல் விட வேண்டியது தானுங்கோ.**

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 232

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## சுய நிர்ணயத்தின் அரசியல் கோலங்கள்



பாயவறா மக்களின் நிலைமை....

சர்வதேச சட்டங்களை, அது உள்ளடக்கிய சுய நிர்ணய சரத்துகளை பற்றி, அவற்றின் நடைமுறைகளை ஆராய்ந்த பல சர்வதேச புத்திஜீவிகள் சர்வதேச சமூகம் அரசியல் கலப்பற்ற, பொதுவான நியதிகளை ஏற்படுத்தாததும், கடைப்பிடிக்காததும், ஒரு நாட்டுக்குள் வாழும் சிறுபான்மை மக்களையோ தேசங்களையோ தங்களது வசதிகளுக்கும் அதிகாரத்துக்கும் ஏற்றபடி அவர்களது உரிமைகளை மதியாது, நடத்தி, அப்படிப் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு நீதியோ நியாயமோ பெறவும் முடியாத வகையில் நிராதரவாக விட்டுள்ளது என்று கருத்துக் கூறியுள்ளார்கள்.

இந்த நடைமுறைகளும் மனோபாவங்களும் சுயநிர்ணய உரிமையைப் பாவித்துவிடுதலைபெறவோசுயாட்சியை அமைக்கவோ விரும்பும் தமிழ் மக்கள் போன்ற பல தேசங்களையும் சிறுபான்மையினரையும் பாதிக்கின்றது.

சுயநிர்ணய உரிமை காலனித்துவ நாடு, தான் அடிமையாக வைத்திருந்த நாட்டிலிருந்து வெளியேறிய போது எந்த எல்லைகளை அந்த நாட்டுக்காக அமைத்ததோ, அதுதான் நாட்டின் எல்லையாகி, அந்த நாட்டின் மக்கள் இன்னும் ஒரு நாட்டினால் ஆக்கிரமிக்கப்பட்டால் மட்டுமே அந்த மக்களுக்கு சுயநிர்ணயம் உண்டு என்ற குறுகிய சட்ட விளக்கமே சர்வதேசம் கடைபிடிக்கிறது.

அதன் விளக்கத்தில் சர்வதேச சமூகமும் – ஐ.நா. கூட – ஸ்ரீலங்கா நாட்டின் எல்லைகள் பிரித்தானியா வெளியேறிய போது வகுத்தது என்ற நிதர்சனத்தில் தமிழ் மக்கள் கோரும் சுய நிர்ணயமானது சர்வதேச உறவுகள், இறைமை, உள்நாட்டு விடயங்களில் தலையிடாமை, ஒரு நாட்டின் பிராந்தியத்தை மதிப்பது, பிராந்திய ஒற்றுமை போன்ற பல அலங்கார கட்டுப்பாடுகளை கடந்து செல்ல வேண்டிஉள்ளது. யூகோஸ்லாவியாவின் போர்கள் நடந்த பொழுது அதனது இறைமையில், உள்நாட்டுபிரச்சினைகளில் ஈடுபட ஐ.நா. தயக்கம் காட்டிய பொழுது ரஷ்யாவை பலவீனமாக்கும் முயற்சியில் அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் ஒன்றியமும் நேட்டோ ஊடாக, அரசியலில் இணங்கியவர்களுக்கு ஆதரவு அளித்துக் கொண்டிருந்தனர்.

சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் அது தவறு என ஐ.நா. கூட கருத்துக்கள் வெளியிட்டாலும், புவியியல் அரசியல்களில் இயங்கி பின்னர், மேலைத்தேய படைகள் கொசோவோ மக்களுக்கு மனிதாபிமான உதவிகளுக்காகத் தலையிட்ட போது, அப்படியான தலையீடு ஒன்று தமிழ் மக்களுக்காக நோர்வே, அமெரிக்கா ஈடுபாட்டில் ஐரோப்பிய ஒன்றியம் செய்யலாம், செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடம் கூடப் பரவலாக இருந்தது. ஆனால் அது நடக்கவில்லை என்பது நிதர்சனம். ஏன் என்பதை சிறிது பின்னால் பார்க்கலாம்.



அதற்கு முன்னால் தமிழ் மக்களுக்கு இவற்றை ஒட்டிய விளக்கத்திற்காக பல இருந்தாலும் சுருக்கத்துக்காக இரண்டொரு உதாரணங்கள் தருகிறேன்.

பங்களா தேசம் பிறந்ததும் நைஜீரியாவில் இருந்து பிரிந்து கொள்ள போராடிய ஈக்போ (Igbos), ஒகோனொஸ் (Ogonis)இனத்தவரின் பாயவறா(Biafro) தேசங்கள் அழிக்கப்பட்டதும் பாடங்கள்.

பாயவறா நாட்டை கோரிய இனங்கள், தமிழ் மக்களைப் போலவே பிரித்தானிய காலனித்துவ காலத்துக்கு முன் இருந்தே தங்களை தனித்துவத்துடன் ஆட்சி செய்தவர்கள். சர்வதேசம் அவர்கள் விளங்கிக் கொண்ட சுயநிர்ணய உரிமையில் அந்த உரிமை பாயவறா மக்களுக்கு இருப்பதாகக் கருதவில்லை. பிரித்தானியா விட்டுச் சென்ற நைஜீரியாவை, அதன் எல்லைகளோடு பார்த்து பாயவறா மக்கள் ஒன்றில் தங்களது போரினை வென்று, நைஜீரியாவிடம் இருந்து பிரிந்து அரசியல் ஆதரவுகளுடன் தனியான இறைமையுள்ள நாடாக உருவாகி இருக்க வேண்டும். அல்லது நைஜீரியா அரசு அவர்களது உலக சுயநிர்ணயத்தை ஏற்று சுயாட்சிக்கான அரசியல் அமைப்பை பாயவறா மக்களின் இணக்கத்தில் நடைமுறைப்படுத்தி இருக்க வேண்டும்.

போரினை முடிவுக்குக் கொண்டு வர, நைஜீரியா அரசு பாயவறா பகுதிகளுக்கு அத்தியாவசிய சேவைகளை – உணவு உட்பட – முடக்கி, கோடிக்கணக்கில் அந்த மக்களை பட்டினியால் இறக்க விட்டு அவர்களது கோரிக்கைகளை முன்னெடுப்பார் இல்லாது சாகடித்தது.

இந்த நிலையில் தான் தமிழ் மக்கள் தங்களது அரசியலை எதிர்கொண்டார்கள்.

பாகிஸ்தானைப் பொறுத்தவரையில் அதன்மக்கள்பிரிட்டானியாஅவர்களுக்கு சுதந்திரம் தந்து வெளியேறிய போது, அது அமைத்த பாகிஸ்தான் என்ற எல்லை கோடுகள் சர்வதேசத்தால் (இந்தியாவினால் கூட) ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதன் பின்னணியில் சுயநிர்ணயச் சட்டங்கள், சர்வதேச விளக்கங்களில், கிழக்குப் பாகிஸ்தானின் வங்காளம் பேசிய மக்களுக்கு அந்த உரிமை இருக்கவில்லை. ஆனால்அவர்கள்ஆயுதப்போராட்டத்தில் இறங்கிய பின்னர் இந்திராகாந்தி மனிதாபிமான அடிப்படையில் உள்ளீடு செய்து, விடுவித்து, இந்தியாவின் ஆளுமையில் பங்காளதேசத்தை உருவாக்கினார். கோசோவின் ஐரோப்பிய ஒன்றியம் நேட்டோ மூலம் உள்ளீடு செய்ததற்கு ஆதரவாக கருதப்பட்டது.

இது, இந்திரா காந்தியின் கொலைக்குப் பின்னால் ராஜீவ் காந்தி பதவியேற்ற போது அவருக்கோ இந்தியாவிற்கோ அந்த அளவு சர்வதேச ஆளுமை இருக்கவில்லை. அதே சமயம் இந்தியாவின் நிர்வாக துறைகளின் கணிப்பில் ஸ்ரீலங்காவை பிடிப்பது அவர்களது பிராந்திய நலன்களுக்கு பாதிப்பை தரக்கூடியது என்பது முக்கியமானதால் ஒப்பந்தத்தில் ஏற்படுத்தப்பட்ட வழிகளை அவர்கள் நடைமுறைப்படுத்தினார்கள்.

ஸ்ரீலங்காவின் பிரிவினை, தமது உள்நாட்டில் பொதிந்து கிடக்கும் பல பிரிவினைக் கோங்களுக்கு உயிரளிக்கும் என்ற எண்ணப்பாங்கு இந்தியாவிற்கு மேலோங்கி இருந்தது.

தமிழ் மக்கள் இந்தியா தங்களை நம்ப வேண்டும், தாங்கள் தென்பகுதியில் தொப்புள் கொடி உறவுகள் எனக் கருதினார்கள்.

இந்தியாவோ திராவிடப் பகுதிகளில் தான் அதிக கவனங்கள் பிரிவினையொட்டி பார்த்தது.

அந்தத் தருண அணுகுமுறைகள் பற்றி ஏற்கனவே பதிந்துள்ளமையால் அவற்றை விட்டு நடந்த வேறு சிலவற்றை பார்க்கலாம் என நினைக்கிறேன்.

(வளரும்...)



காலைக்கதிர்
Kalaikkathir

# 'ஜி20' நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மார்ச் மாதம் புதுடெல்லியில் சந்திக்கவுள்ளனர்







இருபது நாடுகளின் குழு என்ற 'ஜி20' அமைப்பின் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் இந்த ஆண்டு மார்ச் மாதம் புதுடெல்லியில் சந்திக்க உள்ளனர் என்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

2022 டிசெம்பரில் தொடங்கிய ஜி20யின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுக்கொண்டது.

43 பிரதிநிதிகள் குழுக்களின் தலைவர்கள் – ஜி20 இல் இதுவரை இல்லாத மிகப் பெரியளவில் – அடுத்த ஆண்டு செப்டெம்பரில் நடைபெறும் இறுதி புதுடெல்லி உச்சிமாநாட்டில் பங்கேற்கும்.

பங்களாதேஷ், எகிப்து, மொரிஷியஸ், நெதர்லாந்து, நைஜீரியா, ஓமன், சிங்கப்பூர், ஸ்பெயின் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியவை இந்தியாவின் சிறப்பு அழைப்பாளர் விருந்தினர் நாடுகள்.

நாடு முழுவதும் பல நகரங்களில் ஜி20 கூட்டங்களை இந்தியா நடத்துகிறது.

நேற்று நடைபெற்ற வாராந்திர செய்தியாளர் சந்திப்பின் போது, இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி, ஜி20 வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தை இந்தியா நடத்தும் என்று கூறினார்.

ஆனால் சந்திப்புக்கான திகதி அல்லது இடம் எதை




யும் அவர் உறுதிப்படுத்தவில்லை.

ஜி20 நாட்காட்டியை நாங்கள் போகிற போக்கில் அறிவிக்கிறோம். ஆமாம், வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் இருக்கும். வழக்கம்போல் ஜி20 வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தை நடத்துவோம். புதுடெல்லியில்தான் இருக்கும் என்று நினைக்கிறேன், அதுதான் திட்டம். அதை நிர்ணயிக்கவும், அது பொருத்தமானதாக இருக்கும்போது (பிற விவரங்களை) அறிவிப்போம் என்று பாக்சி கூறினார்.

நடக்கும் மற்ற ஜி20 கூட்டங்களை நாங்கள் அறிவிக்க முயற்சிப்போம், என்று ஊடகங்களின் கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இந்த கருத்துக்களை தெரிவித்தார்.

அதன் ஜி20 தலைமைத்துவ இலக்கான வசுதைவ குடும்பகம் – "ஒரே பூமி, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம் மற்றும் அனைத்து அரசு அணுகுமுறையின் பிரதமரின் தொலைநோக்குப் பார்வையில் இருந்து உத்வேகம் பெற்று, இந்தியா 50க்கும் மேற்பட்ட நகரங்களில் 32 வெவ்வேறு தொழில்முறைத் தளங்களில் 200 கூட்டங்களை நடத்தவுள்ளது.

வெளிவிவகார அமைச்சின் தகவலின்படி, ஜி20 பிரதிநிதிகள் மற்றும் விருந்தினர்களுக்கு இந்தியாவின் வளமான கலாச்சார பாரம்பரியத்தின் ஒரு பார்வையை வழங்கவும், அவர்களுக்கு ஒரு தனித்துவமான இந்திய அனுபவத்தை வழங்கவும் இந்தியாவுக்கு வாய்ப்பு உள்ளது.

முந்தைய அறிக்கையில், இந்தியாவின் ஜி20 கதையின் ஒரு பகுதியாக இருக்கும் தனித்துவமான வாய்ப்பை நாட்டின் குடிமக்களுக்கு வழங்குவதற்கு ஜி20 செயலகத்திற்கு அதன் தலைமைத்துவப் பதவி ஒரு வாய்ப்பாகும் என்று வெளிவிவகார அமைச்சு கூறியது.

ஜி20 உறுப்பு நாடுகள், சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் பிறருக்கு ஒரு வருட கால இந்திய அனுபவத்தை' வழங்க இந்திய ஜி20 தலைமைத்துவம் திட்டமிட்டுள்ளது.

(மூலம்:ஏ.என்.ஐ.)

# இந்தியப் பங்குச் சந்தை புத்தாண்டில் மேம்படும்!

## தலைமை முதலீட்டு அதிகாரி ராதாகிருஷ்ணன் நம்பிக்கை

இந்தியப் பங்குகள் கடந்த ஆண்டில் நேரம் மற்றும் மதிப்புத் திருத்தங்களுக்குப் பிறகு 2023 இல் சிறந்த செயல்திறனுடன் மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என ஃபிராங்க்ளின் டெம்பிள்டனின் தலைமை முதலீட்டு அதிகாரி, ஈக்விட்டி இந்தியா ஆனந்த் ராதாகிருஷ்ணன் நம்பிக்கை வெளியிட்டார்.

ப்ளூம்பெர்க் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், மதிப்பீடுகள் ஓரளவு மிகவும் மிதமானதாகிவிட்டதாகவும், 2023 ஆம் ஆண்டிற்கான நியாயமான வருவாய் வாய்ப்புகளை அனுமதிக்கும் என்றும் கூறினார்.

எனவே ஒருவிதத்தில், 2022 ஐ விட 2023 சிறந்த ஆண்டாக இருக்கும் என்று நான் பார்க்கிறேன். – என்றார் அவர்.

அவரைப் பொறுத்தவரை, உலகின் பிற பகுதிகளை விட இந்தியாவில் மேக்ரோ பொருளாதார தலைவீடுகள் மிகவும் முடக்கப்பட்டுள்ளன, அதே நேரத்தில் பொருள்களின் விலைகள் குறைவதால் வருவாய் வளர்ச்சி மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது, சந்தையில் இருந்து வருங்கால வருவாயை முன்னிறுத்துவதாக அவர் கூறினார்.

மேலும், கடன் சந்தை நிலைமை சிறப்பாகத் தொடங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் கடன் முதலீடுகள் கவர்ச்சிகரமானதாகத் தோன்றத் தொடங்கியுள்ளன, ஆனால் சமீபத்திய



ஆண்டுகளில் பங்குகளுக்கான உள்ளூர் ஓட்டங்களில் கவர்மையான முன்னேற்றம் இருந்தபோதிலும், இந்தியர்கள் இன்னும் உள்நாட்டு பங்குகளில் முதலீடு செய்யவில்லை என்று தலைமை முதலீட்டு அதிகாரி சுட்டிக்காட்டினார்.

பெரும்பாலான இந்திய முதலீட்டாளர்கள் பங்குகளை வெளிப்படுத்துவதற்கு முறையான முதலீட்டுத் திட்டங்களைப் பயன்படுத்துவதால், இந்த ஓட்டங்களில் சில, அதிக நடத்தை மற்றும் கட்டமைப்பு இயல்புடையவை என்று அவர் கூறினார்.

சில முதலீட்டாளர்கள் மொத்தத் தொகையை ஒதுக்கீடு செய்ய விரும்பினால், ஒருவேளை இன்று, ஒரு வருடத்திற்கு முன்பு இருந்ததை விட பங்காண்மையைக் காட்டிலும் கடன் சற்று கவர்ச்சியைக் கொண்டுள்ளது என்று தலைமை முதலீட்டு அதிகாரி சுட்டிக்காட்டினார்.

ப்ளூம்பெர்க் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், மதிப்பீடுகள் மிகவும் மிதமானதாகிவிட்டதாகவும், 2023 ஆம் ஆண்டிற்கான நியாயமான வருவாய் வாய்ப்புகளை அனுமதிக்கும் என்றும் கூறினார்.

(மூலம்: 'பிஸ்னஸ் ஸ்ராண்டட்')




# சூடானுக்குச் செல்லும் இந்தியாவின் அமைதிப் படையில் பெண்கள் அணி!

## பாரதத்தைப் பாராட்டுகின்றது ஐ.நா. அமைப்பு

நியூயோர்க்,ஜன.07

சூடானின் அபெய் பகுதியில், ஐ.நாவின் இடைக்கால பாதுகாப்பு படையின் முற்றிலும் பெண்களை கொண்ட இந்திய அமைதிப்படையினர் பாதுகாப்பு படையினர் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இதன் மூலம், 2007 க்குப் பிறகு, ஐ.நா. பணியில் ஈடுபடும் – பெண்கள் மட்டுமே இடம்பெற்ற – மிகப்பெரிய அமைதிப்படையினர் என்ற பெருமை இவர்களுக்கு கிடைத்துள்ளது. இதற்கு முன்னர் கடந்த 2007 ல் லைபீரியாவில் பெண்கள் மட்டும் இடம்பெற்ற பாதுகாப்பு படையினர் ஈடுபட்டனர்.

ஐ.நா. பாதுகாப்பு நடவடிக்கையின் கீழ், பெண்கள் மட்டும் இடம்பெற்ற அமைதிப்படையினர் அனுப்பிய முதல் நாடு என்ற பெருமை இந்தியாவுக்கு கிடைத்துள்ளது. இவர்கள் லைபீரியா பொலிஸுடன் இணைந்து, பாதுகாப்பு பணி, இரவு நேர ரோந்து உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டனர்.

தற்போது, சூடானில் பணிக்கு செல்லும் பாதுகாப்பு படையினரில், பெண் வீராங்கனைகளுடன், 2 உயர் அதிகாரிகள், 25 மற்ற அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் பாதுகாப்பு சார்ந்த பணிகளில் ஈடுபட உள்ளனர்.

சமீபத்தில் சூடானின் அபெய் பகுதியில் ஏற்பட்ட வன்முறையில், பெண்கள் மற்றும் குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இச்சூழ்நிலையில், இந்த படையினரின் பணி அங்கு வரவேற்பை பெறும் என ஐ.நா. நம்பிக்கை தெரிவித்துள்ளது. மேலும் அமைதிப்படையில் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்ற இந்தியாவின் நோக்கத்தையும் இது உணர்த்துகிறது எனவும் கூறியுள்ளது.

## யானையுடன் .......

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)
மொட்டு சின்னத்தில் போட்டியிடும்.

பரந்துபட்ட அரசியல் கூட்டணி அமைப்பது தொடர்பில் பெரும்பாலான அரசியல் கட்சிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை சாதகமாக நிறைவு பெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் ஒன்றிணைந்த அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து மீண்டும் புதிய நாமத்தில் அரசியல் கூட்டணி அமைக்கப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் இதுவரை உத்தியோகப்பூர்வமான தீர்மானங்கள் ஏதும் எடுக்கப்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணியமைத்தால் பொதுஜன பெரமுன தனித்துவத்தை விட்டுக் கொடுக்காது – என்றார் அவர்.

## வருவார் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுதந்திர தின நிகழ்வுகளில் பங்குபற்ற அவர் இலங்கை வருவார் என மற்றொரு செய்தி வட்டாரம் தெரிவித்தது.

## வடக்கு, கிழக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்களை ஒன்றிணைத்து கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

'ஒன்றிணைவோம் ஒருமித்த குரலில் உரக்கச் சொல்வோம்' எனும் தொனிப் பொருளில் நேற்று முன்தினம் தொடக்கம் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் தொடர் கவனவீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

மன்னாரில் 2 ஆம் நாள் கவனயீர்ப்பு போராட்டம் இன்று காலை 10 மணியளவில் மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் ஆரம்பமானது.






கிளிநொச்சியில் 2ஆவது நாளாக நேற்றுக் காலை 10 மணியளவில் பளை நகர்ப் பகுதியில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. இதன் போது, பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய பதாதைகளை மக்கள் ஏந்தியிருந்தனர்.

யாழ்ப்பாணம் – நாவற்குழியில் இரண்டாவது நாளாக நேற்றும் கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் தொடர் கவனவீர்ப்பு போராட்டம் வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தரணிக்குளம் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்துக்கு முன்பாக காலை 11 மணியிலிருந்து இடம்பெற்றது.

நேற்று இரண்டாவது நாளாக மல்லாவியிலும் பஸ் நிலையத்துக்கு முன்பாக காலை 11 மணியளவில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டம், பாண்டிருப்பு திரௌபதை ஆலய முன்றிலிலு நேற்று பொதுமக்கள் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு மாகாணத்தின் பொருளாதாரம் கப்பல்சேவை ஊடாக வளர்ச்சியடையும்!

## யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரம் நம்பிக்கை



கப்பல்சேவைமூலம்வடமாகாணத்தை பொருளாதாரத்தில் முன்னேற்றக் கூடிய சாத்தியம் இருப்பதாக யாழ்ப்பாணம் வணிகர் கழகம் தலைவர் இரத்தினலிங்கம் ஜெயசேகரன் தெரிவித்தார்.

யாழ். வணிகர் கழகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

இந்தியாவுக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான காகோ சிப் கப்பல் சேவை இந்த மாதம் (தை மாதம்) இறுதியில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

நீண்டகாலமாக வணிகர் கழகம் இவ் காகோ சிப் கப்பல் சேவையை கேட்டதன் தொடர்ச்சியாக இந்திய இலங்கை அரசாங்கம் தற்போது இணங்கி இந்த சேவையை முன்னெடுக்கவுள்ளது எனவும் கப்பல் சேவையிலே ஈடுபட இருக்கின்ற நிறுவனம் இன்று (சனிக்கிழமை) வணிகர்கழகத்துக்கு வருகை தரவுள்ளது என அவர்களுடன் இது சம்பந்தமாகக் கலந்துரையாட இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதுவரையில் யாழ்ப்பாண வர்த்தகர்கள் இந்தியாவில் இருந்து கொழும்பு ஊடாகப் பொருள்களை ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த வர்த்தகளை தற்போது காங்கேசன்துறை வழியாக வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுமாறு கேட்டுக்கொண்டார்.

வட மாகாணத்தில் இருந்து தென்னை பனை சார்ந்த உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்ய முடியும். இதேவேளை இந்தியாவினுடைய சந்தை நிலைவரத்தை சரியாக அறிய வேண்டும். இந்தியா வர்த்தக சங்கங்கள் கூடி கலந்துரையாடி அது சம்பந்தமான முன்னெடுப்புக்களை முன்னெடுக்க முடியும்.

நீண்ட காலம் எதிர்பார்த்த இந்த நிகழ்வு தற்போதைய காலத்தில் நடைபெற இருக்கின்றது. அதை நாங்கள் இந்திய இலங்கை சங்கத்துக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். முக்கியமாக வர்த்தகர்களுக்கு விடுக்கின்ற வேண்டுகோள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இதிலிருந்து முன்னேற வேண்டும் என்பதே வேண்டுகோள். ஆகையால் இந்த சந்தர்ப்பத்தை தயவுசெய்து ஒவ்வொருவரும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

தற்போதய அரசாங்கம் ஒரு சில பொருள்களுக்கான தடைகளை விதித்துள்ளது. தடை செய்யாத பொருள்களை நாங்கள் இறக்குமதி செய்யலாம். அத்துடன்தடை செய்யாத பொருள்களுக்கான இறக்குமதி கட்டளைக்குரிய டொலர்களை அவர்கள் வங்கி மூலம் விடுக்கிறார்கள், தற்போது வந்திருக்கும் நடைமுறை சற்று தளர்த்தப்பட்டு வருகின்றது. பொருள்களுக்கான தடைகள் நீக்கப்பட்டும் வருகின்றன.

இந்திய ரூபாவிலும் இனிமேல் இறக்குமதிகளை ஏற்றுமதியிலும் செய்யலாம் என்று பத்திரிகை மூலம் தகவல் வெளிவந்துள்ளது. இலங்கை வங்கி இந்திய பணத்தின் மூலம் பரிமாற்றங்கள் நடைபெற் றுக் கொண்டிருப்பதான தகவலை வங்கி அதிகாரிகள் தெரிவித்து இருக்கிறார்கள்.

அதே மாதிரி இந்த ஏற்றுமதி இறக்குமதிலும் இந்திய ரூபா பயன்படுத்தலாம் என்ற தகவல் வழங்கப்பட்டது. இது சம்பந்தமாக வங்கி அதிகாரிகளுடன் அரசு அதிகாரியுடன் தொடர்பு கொண்டு இருக்கின்றோம். எனக்கும் அதே ஏற்றுமதி செய்யலாம் அதே நேரம் இந்திய ரூபாவிலும் ஏற்றுமதி இறக்குமதி செய்யலாம் என நினைப்பதாக தெரிவித்தார்.

# வடக்குக் கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினரின் தொடர் கவனவீர்ப்பு கிளிநொச்சியிலும் நடந்தது!

## 2 ஆவது நாளாக நேற்றும் முன்னெடுப்பு



வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் தொடர் கவனவீர்ப்பு போராட்டம் கிளிநொச்சியில் 2 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் பளை நகர்ப் பகுதியில் இடம்பெற்றது. இதன் போது, பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய பதாதைகளை மக்கள் ஏந்தியிருந்தனர்.

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணியில் இணைய வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

# தமிழ் அரசியல் கட்சிகள் ஓரணியில் பயணிக்குக மன்னாரில் 2 ஆவது நாளாகவும் கவனவீர்ப்பு!



வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் 'ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்துவதற்கு' அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணியில் திரண்டு செயல்படக் கோரி வடக்கு கிழக்கு மாகாணங்களில்தமிழ்மக்களைஒன்றிணைத்து கவனயீர்ப்புபோராட்டம்முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 'ஒன்றிணைவோம் ஒருமித்த குரலில் உரக்கச் சொல்வோம்' எனும் தொனிப்பொருளில் வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் தொடர் கவனயீர்ப்புப்போராட்டம்மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த நிலையில் மன்னாரில் 2 ஆம் நாள் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை)காலை 10 மணியள வில் மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில்ஆரம்பமானது.வடக்கு–கிழக்கில் உள்ள சிவில் அமைப் புகள், பாதிக்கப்பட்ட மக்கள், கல்விமான்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் இளைஞர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து இந்தக் கவன வீர்ப்பு போராட் டத்தை முன்னெடுத்து வருகின்றனர். வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு வின் ஏற்பாட்டில் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை இந்தப் போராட்டம் இடம் பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மனித வியாபாரம் பற்றி ஊடகவியலாளர்களுக்கு மட்டக்களப்பில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு!



நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் பற்றிய சூழமைவில் கடல் வழியாக ஆட்கடத்தல், மனித வியாபாரம் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள கிழக்கிலங்கை சமூக எழுச்சி தன்னம்பிக்கை அமைப்பின் அலுவலகத்தில் வியாழக்கிழமை இடம் பெற்றது.

நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்துக்கு எதிரான அமைப்பு, சமூக மேம்பாட்டு சேவைகள் அமைப்பு மற்றும் கிழக்கிலங்கை சமூக எழுச்சி தன்னம்பிக்கை அமைப்பு ஆகிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒருங்கிணைந்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்களுக்கு இந்தக்கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இதன்போது கடல்வழியாக ஆட்கடத்தல், புலம்பெயர்தல் போன்ற பாதுகாப்பற்ற சட்டவிரோத பயணங்களால்ஏற்படும்ஆபத்துக்கள், சட்டரீதியற்ற கடல் பயணங்கள், தொடர்பிலும், இவை தொடர்பான சட்ட திட்டங்கள் தொடர்பிலும், ஊடகவியலாளர்களுக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டன.

கிழக்கிலங்கை சமூக எழுச்சி தன்னம்பிக்கை நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் செல்லத்தம்பி உதயேந்திரன் மற்றும் சிரேஷ்ட வெளிக்கள உத்தியோகஸ்தர் ஜெயசாந்தி ஜெயச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களையும். விளக்கங்களையும் வழங்கினர்.

# கர்நாடகாவில் இலங்கை அகதிகள் 38 பேர் உண்ணாவிரதப் போராட்டம்!

கனடா செல்வதற்காக முகவர்களால் இந்தியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்களாலேயே காட்டிக்கொடுக்கப்பட்டு கைதுசெய்யப்பட்ட இலங்கை அகதிகள் 38 பேர் நேற்று (வெள்ளிக்கிழமை) தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு 2021/06/10 ஆம் திகதி கர்நாடகாவின் மங்களூரில் கைது செய்யப்பட்ட சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர்களை விடுதலை செய்த நீதிமன்றம் அவர்களை நாட்டுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு உத்தரவிட்டிருந்தது.

அதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்காக 15 நாள்கள் அவகாசம் நீதிமன்றால் வழங்கப்பட்ட போதிலும் தம்மை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாட்டை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்தே அகதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யாரிடம் தொடர்புகொள்வது என்பது தெரியாது என்று பரிதவிக்கிறோம் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு விடுதியில் தாம் தங்கவைக்கப்பட்டுள்ளோம் எனவும் உணவு, மருத்துவ வசதிகள் இல்லாமல் இருப்பதாகவும் சிலர் கடும் நோய்த்தாக்கத்துக்கு உட்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்கள் தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்து அதிகரிப்பு!

இலங்கையின் உத்தியோகபூர்வகையிருப்பு சொத்துக்கள் அதிகரிப்பைக்கண்டுள்ளன என மத்திய வங்கியின் அறிக்கை தெரிவிக்கின்றது.

அறிக்கையின் படி, கடந்த செப்ரெம்பர் மாதத்துடன் ஒப்பிடும் போது இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்கள் டிசெம்பர் இல் 5 சதவீதம் அதிகரித்து 1,896 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது. கடந்த நவம்பர் மாதம் இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்கள் 1,806 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விடுவிக்கப்படாத 72 ஆயிரம் கிலோ தோடம்பழங்களை 60 வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கத் தீர்மானம்!

இறக்குமதி செய்யப்பட்டு துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்படாத 72 ஆயிரம் கிலோ தோடம்பழங்களை 60 வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலை, சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை, மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை உட்பட சுமார் 60 மாகாண வைத்தியசாலைகளுக்கு இந்தத் தோடம்பழங்களை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 3 கொள்கலன்களில் உள்ள தோடம்பழங்களின் மொத்த பெறுமதி 7 கோடியே 20 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.01.2023இல் வெளியிடப்பெற்றது.